அனைத்துலகத் தமிழ்க் கல்வி பண்பாடு அறிவியல் மேம்பாட்டு இணையம்
International Tamil Education Cultural Scientific Development Federation

# அரையாண்டுத்தேர்வு 2015-2016

## தமிழ்மொழி
## வளர்நிலை 4

பெயர்: ______________________________

நேரம்: 90 நிமிடங்கள்
மொத்தப்புள்ளிகள்: 100

1) மிகப் பொருத்தமானதைத் தெரிந்து, கீறிட்ட இடத்தில் எழுதுக!

1. இயல், இசை, நாடகம் ஆகிய மூன்றும் ____________________ எனப்படும்.
   (செந்தமிழ், முத்தமிழ், பைந்தமிழ்)

2. இலக்கண நூல்களில் முதன்மையானது ______________________ ஆகும்.
   (திருக்குறள், சிலப்பதிகாரம், தொல்காப்பியம்)

3. யாருடைய மனமும் வருந்தும் படி ________________________.
   (பேசாதே, பேசு, பேசவேண்டும்)

4. முயற்சி உடையவர்கள் ________________________ வாழ்வார்கள்.
   (அவமானத்தோடு, மதிப்போடு, கவலையோடு)

5. தன் செயல்களால் உணர்ந்து கற்றுக் கொள்வது ____________________.
   (தன்னறிவு, பட்டறிவு, நுண்ணறிவு)

6. தமிழர்களின் கொண்டாட்டங்களில் ஒன்று ____________________ ஆகும்.
   (நத்தார், தீபாவளி, ஆடிப்பிறப்பு)

7. நல்ல நட்பைத் ________________________ப் பெற வேண்டும்.
   (வாங்கி, தேடி, வணங்கி)

8. இன்று நான் விளையாட வரமாட்டேன் ___________________________
   எனக்கு நாடகப் பயிற்சி இருக்கின்றது.
   (அதனால், ஆகவே, ஏனென்றால்)

9. உடுக்கை என்பது ________________________.
   (முழவு, மரம், உடை)

10. ஒரு இனத்தின் அடையாளம் ________________________ ஆகும்.
    (கல்வி, மதம், மொழி)

11. அக்கா கூடத்தை ___________________________ எனத் துப்புரவாக்கினார்.
    (சலசல, மளமள, நறநற)

12. பழமொழி – தன்பலம் கொண்டு ______________ ஏற வேண்டும்.
(அம்பலம், அம்பழம், அம்பளம்)

13. அப்பா நண்பர்களுடன் அளவளாவிக் கொண்டு இருந்தார். இங்கு அளவளாவுதல் என்பது ______________.
(சண்டை பிடித்தல், எதிர்ப்பேச்சு, உரையாடுதல்)

14. அம்மாவின் அண்ணாவை மாமா என்று அழைப்பது போல அப்பாவின் அண்ணாவை ______________ என்று அழைப்பர்.
(அங்கிள், பெரியப்பா, மச்சான்)

15. நாங்கள் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தோம், ______________ வெளியே வெடிச் சத்தம் கேட்டது.
(அப்பொழுது, இப்பொழுது, எப்பொழுது)

16. மெய்யெழுத்துகள் அமைந்த கூட்டம் ______________.
(அ இ உ எ , க் ங் ச் ஞ் , க ப ம ச)

17. மந்திரவாதியைக் கண்ட மக்கள் ______________ செய்தனர்.
(சண்டை, குழப்பம், ஆரவாரம்)

18. சிற்பம் + கலை இதைச் சேர்த்து எழுதினால் ______________.
(சிற்பக்கலை, சிற்பகலை, சிற்பம்கலை)

19. நாளை நடக்கும் விழாவில் மாதவி வீணை ______________.
(மீட்டும், மீட்டுகின்றாள், மீட்டுவாள்)

20. தமிழில் காப்பியம் என்பது ______________ ஆகும்.
(குறுங்கதை, நெடுங்கதை, சிறுகதை)

(20 புள்ளிகள்)

2) கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை எழுதி, வாக்கியங்களை நிறைவு செய்க!

1. எனது ஆசிரியர் மாணவர்களுடன் அன்பாகப் ____________________.
2. குழந்தை பசியால் வீரிட்டு ____________________________.
3. சிற்றுந்து வேகமாக வந்து சிறுவனை _________________________.
4. சிலப்பதிகாரம் இளங்கோவடிகளால் ___________________________.
5. தன்னை மதிப்பவன் மற்றவருக்குத் தீங்கு _______________________.

(10 புள்ளிகள்)

3) தரப்பட்டிருக்கும் சொற்களில் மிகப் பொருத்தமானதைத் தெரிந்து, கீறிட்ட இடங்களில் எழுதுக!

தமிழிலுள்ள அறநூல்களில் விழுப்பம் உடையது திருக்குறள். திருக்குறள் ________________________ எனப் போற்றப்படுகின்றது. இது உலகிலுள்ள அனைத்து ________________________ பொதுவான ஒழுக்கங்களைக் கூறுகின்றது. திருக்குறள் பல மொழிகளில் மொழி-பெயர்க்கப்பட்டுள்ளது. தமிழிலுள்ள நூல்களில் அதிக ____________________ மொழிபெயர்க்கப்பட்ட நூல் இதுவாகும். வள்ளுவர் வாழ்க்கைக்குத் தேவையானற்றை ஒவ்வொரு _____________________________ வரிகளுக்குள்ளும் தந்துள்ளார். திருக்குறளை உலக ________________________ பலர் வியந்து போற்றுகின்றார்கள்.

| | | |
|---|---|---|
| மக்களுக்கும் | இரண்டு | அறிஞர்கள் |
| உலகப்பொதுமறை | மொழிகளில் | |

(10 புள்ளிகள்)

4) கீறிட்ட இடங்களில் மிகப் பொருத்தமான சொற்களை வைத்து எழுதுக!

1. வெள்ளை உடையில் ______________________ படிந்தது.
(கரை, கறை)

2. மான் குளத்தில் ______________________ குடித்தது.
(தண்ணீர், தன்னீர்)

3. அந்தக் கட்டடம் முந்நூறு ஆண்டு காலப் ________________ வாய்ந்தது.
(பழைமை, பளைமை)

4. மாதவன் கால் ______________________ கீழே விழுந்தான்.
(வலுக்கி, வழுக்கி)

5. பூவிலிருந்து ______________________ வீசியது.
(நருமணம், நறுமணம்)

(5 புள்ளிகள்)

5) கீழே தரப்பட்டிருக்கும் ஆங்கிலச் சொற்களைத் தமிழ்மொழியில் எழுதுக!

1. spider ______________________

2. write ______________________

3. knife ______________________

4. bus ______________________

5. breakfast ______________________

(5 புள்ளிகள்)

6) கீழே தரப்பட்டிருக்கும் சொற்களை வாழிட மொழியில் எழுதுக!

1. பனிகாலம் ____________________

2. விலங்ககம் ____________________

3. சீருடை ____________________

4. மகிழ்ச்சி ____________________

5. வங்கி ____________________

(5 புள்ளிகள்)

7) கீழேயுள்ள பகுதியை வாசித்துத் தரப்பட்டிருக்கும் வினாக்களுக்கு முழுவிடை எழுதுக!

அது ஓர் அழகான ஊர். அந்த ஊரின் மத்தியில் ஓர் ஆலமரம். பெரியதொரு குடையை விரித்து வைத்திருப்பது போல அது தோற்றமளிக்கும். அதன் கிளைகளில் பறவைகள் பல கூடு கட்டி வாழ்கின்றன. ஆலமரத்தின் விழுதுகளில் சிறுவர்கள் ஊஞ்சலாடி மகிழ்வார்கள். மாலை வேளைகளில் ஊரிலுள்ள வயதானவர்கள் அம்மரத்தின் கீழ் ஒன்று கூடி, தங்கள் பழங்கதைகள் பேசித் தனிமையைப் போக்குவர். சில நாட்களில் இளைஞர்களும் தமது ஓய்வு நேரங்களை அங்கு செலவழிப்பர். ஊர்மக்களுக்கான ஒன்றுகூடல்கள் கூட அங்கு நடைபெறுவதுண்டு. அவ்வழியே செல்பவர்கள் ஆலமர நிழலில் அமர்ந்து களைப்பாறுவர். மழைக்கு ஒதுங்குவதும் அங்கேதான். ஆலம் விழுதுகளால் பற்களைத் துலக்கினால் அவை உறுதியடையும். 'ஆலும் வேலும் பல்லுக்குறுதி' என்று ஒரு முதுமொழியை தாத்தா சொல்லிக் கேட்டிருக்கின்றேன். ஒரு மரத்தின் பயன்களைப் பார்த்தீர்களா?

1. பறவைகள் எங்கு கூடு கட்டி வாழ்கின்றன?

_______________________________________________

_______________________________________________

2. சிறுவர்கள் எதில் ஊஞ்சலாடுவார்கள்?

_______________________________________________

_______________________________________________

3. ஆலமரம் எவ்வாறு தோற்றமளிக்கும்?

_______________________________________________

_______________________________________________

4. ஆலம் விழுதுகளால் பற்களைத் துலக்குவது ஏன்?

_______________________________________________

_______________________________________________

5. வயதானவர்கள் ஆலமரத்தின் கீழ் கூடுவது ஏன்?

_______________________________________________

_______________________________________________

(15 புள்ளிகள்)

8) படத்தைப் பார்த்து, உமது கற்பனையில் முப்பது சொற்களுக்குக் குறையாமல் கதை ஒன்று எழுதுக!



(15 புள்ளிகள்)

9) படத்தைப் பார்த்து, ஐந்து வாக்கியங்கள் எழுதுக!



(15 புள்ளிகள்)